**யாழ் தியேட்டர்**
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெமினிகணேசன் ஜானகி
நடித்த
**காவியத் தலைவி**
25, 26-5-72ல் 2-30க்கு
விசேஷ மெற்னி உண்டு.

**நியூ கலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப 2-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நம்பியார் நடித்த
**என் அண்ணன்**

**பவானி சினிமா**
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - கே ஆர் விஜயா
நடித்த
**ஊட்டி வரை உறவு**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-K Rவிஜயா
நடித்த
**நிலவே நீ சாட்சி**

**REGAL** (Jaffna)
Daily 5-15 & 7-15 p. m.
Burt Lancaster
in
**THE PROFESSIONALS**
(Cinemascope-Color)
தினசரி 2-00 இரவு 9-45
ஏ. பி. நாகராஜன்
சரோஜா - நம்பியார்
நடித்த
**மாங்கல்யம்**

**நாகலக்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 4-15 மணிக்கு
SWEET NIGHTS
(இன்ப இரவுகள்)
தினசரி 6-30, இரவு 9-45
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
**தேடி[illegible] மாப்பிள்ளை**

**சாந்தி** சங்கானை
தினசரி 6-30, 9-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**கொஞ்சும் சலங்கை**
வியா வெள்ளி மாலை 4-15
ESPIONAGE in TANGIER
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு
ஆனைப்பாடி இராசிப் புத்தகம் ஒரு இராசிக்கு ஒரு புத்தகம் 1-50 சித்திரை முதல் 12 மாசமும் உங்களின் சகல விபரமும் அடங்கிய உத்தரவாத பலன். ஆனைப்பாடி சோதிட நிலையம் மாவிட்டபுரம் தெல்லிப்பழை. 4987

சாவகச்சேரிச் சந்தையிலிருந்து நாணுமைல் தூரத்தில் டச் வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும், க. மயில்வாகனம், கெல்ஸ்மன் வீதி, சாவகச்சேரி. 5027

### தேவை
கீழ்க்கண்ட வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் தேவை. இளாஸ், மிஷினரி ஐதுபவர், மோட்டருடன் சம்பந்தப்பட்ட மின்சார வேலைகள் தெரிந்த பிற்றர் (Com. Fitter). பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை 25, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 5029

### தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர் ஒன்றுக்கு புக்கிங் கிளார்க், செக்கர்ஸ் (டிக்கட் சேகரிப்பவர்கள்) உடனடியாகத்தேவை 28-ம் திகதிக்கு முன்பு நேரில் வரவும். புக்கிங் கிளார்க் பிணைப் பணம் ரூபா 3000/- செலுத்த வேண்டும். செக்கர்ஸ் ரூபா 2500 பிணைப்பணமாக செலுத்தவேண்டும். கே. விரசிங்கம், 308/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5028

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் பாடசாலை ஒன்றிற்கு காவலாளி ஒருவர் தேவை: கல்வித் தகமை, நேர்மை, அனுபவம் ஆகியவைகளில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்குக. POLY TECHNIC LTD இல: 30, காலி வீதி, கொழும்பு-6. 5030

குடிப்பழக்கம் அற்ற 30 வயதுடைய இந்துசமய மணமகனுக்கு 2-ம் தாரமாக மணப்பெண் தேவை. மணமகனுக்கு சகோதரர்கள் இல்லை. யாழ்ப்பாண நகரில் ஒரு லட்சம் பெறுமதியான தனி கல்வீடு வளவு உண்டு. மாதம் 400/ ரூபாவுக்கு மேல் வருமானம் உடையவர். முழு விண்ணப்பங்களும் சாதகத்துடன் அனுப்ப வேண்டும். விளம்பர இல: 5031, C/o ஈழநாடு விளம்பரம், த. பெ. எண் 49 யாழ்ப்பாணம். 5031


**MANOHARA**
Jaffna
Daily 3 Shows
Sat. Sundays 10-30
ANNA KARENINA

**வெல்லி சினிமா**
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி— ஜெயலலிதா
நடித்த
**தெய்வமகன்**

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**


## விமானத்தை கடத்தியவர் கொலை

லண்டன், மே 24
சல்வடோர் நாட்டில் ஆறு சிப்பந்திகளுடன் விமானம் ஒன்றைக் கடத்தி வைத்துத் தகர்த்தெறியப்போவதாகப் பயமுறுத்திய ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவ்விமானத்தைக் கடத்திச் சென்ற இந்நபர் பிரயாணிகளை வெளியேற அனுமதித்த பின்னர் சிப்பந்திகளுடன் தகர்த்தெறியப் போவதாகவும், இல்லையெனில் 40000 ரூபாவும், பாரசூட் ஒன்றும் தரவேண்டும் என்றும் கோரினார். பாரசூட்டை எப்படிப் போட்டுக்கொள்வதென்று காட்டுவதாகப் பாவனைசெய்த பாதுகாப்பு அதிகாரி கடத்தல்காரரைச் சுட்டுக்கொன்றார்.

## பிரபல பிரி. வழக்கறிஞர் பிரிட் மரணம்

லண்டன், மே 24
பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞர் திரு. டி. என். பிரிட் காலமானார். அவருக்கு 84 வயது.

இலங்கையிலும் கூடப் பிரபல வழக்குகளில் அவர் ஆஜராகியிருக்கிறார். கென்யாவில் மௌமௌ இயக்கத் தலைவராகவிருந்த இப்போதைய அதிபர் திரு. ஜோமோ கென்யாட்டாவுக்கு எதிரான வழக்கிலும் இவர் கென்யாட்டா சார்பில் ஆஜராகி வாதிட்டார்.


**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
சுந்தரராஜன் — பாலாஜி
மற்றும்பலர் நடித்த
வாசுதேவின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

**ராஜநாயகி — காங்கேசன்துறை**
தினசரி 3 காட்சிகள்
V. S. T. பிலிம்ஸ்
**குத்து விளக்கு**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி பி. ப. 2-30. மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
★ சிவாஜி
★ லக்ஷ்மி
★ முத்துராமன்
★ நிர்மலா
நம்பியார்
நாகேஷ்
சுந்தர





மற்றும் பலர் நடித்த
**தங்கைக்காக**
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

**லிடோ** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ராஜேஸ் கன்னா
★ ஆஷா பரேக்
நடித்த
**கதி பதாங்**
(கலர்)
இசை: ஆர். டி. பேர்மன்
டைரக்ஷன்; தயாரிப்பு: சக்தி சமந்தா

# பரதநாட்டியக் கலை விருந்து
நாட்டியக் கலாபமயில், நடனகலாஜோதி
## குமாரி லீலா நாராயணன்
(குத்துவிளக்கு) கதாநாயகி
கோஷ்டியினரின்
### பரதநாட்டியக் கலை நிகழ்ச்சி
### இன்று 25 - 5 - 72ல்
தெல்லிப்பழை லைபிறறி லையின்ஸ் களியாட்டுவிழா
அரங்கில் நடைபெறும் இலவசக்காட்சி
மற்றும் இலவசமாக மாவீரன் அக்பரின் மாயாஜாலக் காட்சிகள்;
லதா சர்க்கஸ்

| | | | |
|---|---|---|---|
| நடன நிகழ்ச்சிகளுக்கு விசேட ஆசனங்கள் ரூபா 1—10 முன்கூட்டியே பதிவு செய்யுங்கள் | விசேடமாக பிரமுகர் கோஷ்டியினரின் மயான காண்டம் | நாடாளர் இணையில் பங்கர கோட்டார் காகிமோஸ்ட்டம் பிரவேசச் சீட்டுமூலம் | களியாட்டவிழா நுழைவுச்சீட்டு: பெரியவர்களுக்கு -/55 சதம் சிறியவர்களுக்கு -/30 சதம் |

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ரவிச்சந்திரன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ டி. கே. பகவதி
வி. கே. ராமசாமி — எஸ். வி. சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
# சபதம்
டைரக்ஷன்: பி. மாதவன் பீ. ஏ.

# ரொடீஷிய - பிரிட்டிஷ் ஒப்பந்தம்: ஆபிரிக்க மக்கள் நிராகரிப்பு

## பியர்ஸ் கமிஷன் அறிக்கை

லண்டன், மே 24

ரொடீஷிய சுதந்திரம் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசுக்கும் சட்டவிரோத ஆட்சியாளர் ஸ்மித்துக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரொடீஷிய மக்களில் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பியர்ஸ் கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக ரொடீஷியாவிலுள்ள சுதேசிகளின் அபிப்பிராயத்தை அறிவதற்காக பியர்ஸ் பிரபுவின் தலைமையில் இந்தக் கமிஷன் நியமிக்கப்பட்டிருந்தது. ரொடீஷியாவில் கறுப்பு மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் இக்கமிஷன் விசாரணைகளை நடத்தியது. அதன்பின் இக்கமிஷன் தயாரித்த அறிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கை இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

ரொடீஷியாவிலுள்ள ஐரோப்பியர்களில் பெரும்பாலானவர்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டபோதிலும் பெரும்பாலான ஆபிரிக்கர்கள் அதை நிராகரித்துவிட்டார்கள் என்று பியர்ஸ் கமிஷன் தெரிவித்துள்ளது. ரொடீஷிய அரசாங்கம் இனப்பாகுபாட்டுக்கு இடம் அளித்துள்ளது என கறுப்பு மக்கள் பயப்படுவதாக பியர்ஸ் கமிஷன் தெரிவித்துள்ளது. அவர்கள் கண்ணியம், நீதி, நியாயமான சமசந்தர்ப்பங்கள் போன்றவற்றை எதிர்பார்க்கிறார்கள் என்று கமிஷன் தெரிவித்துள்ளது.

ரொடீஷியா மீதான பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து இருந்துவரும் என்று பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

பியர்ஸ் கமிஷன் பெரும்பான்மையான மக்களின் கருத்துக்களை அறியவில்லை என்று ஸ்மித் கண்டித்திருக்கிறார்.

சோவியத் — யு. எஸ். தலைவர்களுக்கிடையில்

# இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

## உயர் மட்ட பேச்சு தொடர்கின்றது

மாஸ்கோ, மே 24

அமெரிக்க அதிபர் நிக்ஸனுக்கும் சோவியத் தலைவர்களுக்குமிடையே இரண்டு ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன.

திங்கட்கிழமை மாஸ்கோவுக்கு வந்துசேர்ந்த அமெரிக்க அதிபர் நிக்ஸன் இதுவரை நான்கு தடவைகள் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு பிரெஸ்னேவுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

சோவியத் தலைவர்களுடன் உயர்மட்டப் பேச்சுக்கள் நடந்த இரவு நெடுநேரம் வரையில் நடைபெற்றன. இரண்டு சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன.

சுற்றுப்புறச் சூழ்நிலைகள் மாசுபடாதிருக்க இருநாடுகளும் ஒத்துழைப்பதற்கான முதல் ஒப்பந்தத்தில் அமெரிக்க அதிபர் நிக்ஸனும் சோவியத் அதிபர் பொட்கோர்னியும் கைச்சாத்திட்டார்கள்.

மருத்துவ விஞ்ஞானத் துறையில் குறிப்பாக புற்றுநோய் மார்புநோய்த் தடுப்பு விஷயங்களில் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்க ராசாங்க அமைச்சர் ரோஜர்ஸும் சோவியத் சுகாதார அமைச்சரும் கைச்சாத்திட்டனர்.

முன்பதாக நடைபெற்ற உச்சிமகாநாட்டில் இருதரப்புகளுக்கிடையிலான முக்கிய பிரச்னைகள்பற்றியும் சர்வதேச நிலைமைகள் பற்றியும் ஆலோசனைகள் நடைபெற்றுள்ளன. வியட்நாம் விவகாரம் சம்பந்தமான பேச்சுக்களில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லையென்று கருத்து அடிபடுகிறது.

காரியத் தன்மையோடும் மனப்பூர்வமாகவும் பேச்சுக்கள் நடைபெறுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

ஆயுதக் குறைப்பு ஆயுதவிநியோகம் போன்ற விஷயங்கள் பற்றி ஆலோசனைகள் நடைபெற்றதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

### வியட்நாம் நிலைமை

அமெரிக்க அதிபர் நிக்ஸனுக்கும் சோவியத் தலைவர்களுக்கும் இடையில் உயர்மட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளையில் தென்வியட்நாமில் தேசிய விடுதலைப் படையினர் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். வடவியட்நாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்கப்படைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

இதுவரை சப்ளை பாதைகள் எண்ணெய்க் குழாய்கள் போன்றவற்றின்மீது தாக்குதல் நடத்திவந்த அமெரிக்கப்படைகள் கைத்தொழில் நிலையங்கள்மீதும் குண்டு வீசித் தாக்குவதற்கு ஆரம்பித்துள்ளன.

## அட்டோர்னி ஜெனரலின் அனுமதியில்லை

### வழக்கு தள்ளுபடி

மாவிட்டபுரம், புதன்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவரான வை. இராஜரத்தினத்தை அவமதிக்கும் வகையில் துண்டுப்பிரசுரம் வெளியிட்டதாக அதே வைத்தியசாலையில் வேலைசெய்யும் எஸ். சின்னராசா, எம். சோதிராசா, வே. கதிர்த்தம்பி, ஏ. ராதாகிருஷ்ணன், எஸ் ராஜரத்தினம் ஆகிய ஐவர்மீதும் குற்றம் சாட்டி வழக்கொன்று மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிபதி திரு. ஐ. சிவானந்தன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, எதிரிகள் சார்பில் ஆஜரான புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினம் நீதிபதியிடம் தெரிவித்ததாவது:-

இவ்வழக்கிலுள்ள குற்றச்சாட்டு அட்டோர்னி ஜெனரலின் அனுமதியுடனேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இங்கு அப்படிச்செய்யப்படவில்லை. இங்குநடந்த முறைகேட்டிற்கு விரோதமானது என்றார்.

இத்தருணத்தில் வழக்காளி சார்பில் ஆஜரான வெ. சிறீதரன் அட்டோர்னி ஜெனரலிடம் அனுமதி பெற தவணைதரவேண்டுமென்று கோரினார்.

இறுதியில் நீதிபதி அட்டோர்னி ஜெனரலின் அனுமதிபெற்று வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கினார்.

## உடுப்பிட்டியில் பகிஷ்கரிப்பு

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டித் தொகுதியின் பல பாகங்களிலும் குடியரசு தினத்தன்று அமைதியான முறையில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

நெல்லியடியிலுள்ள கடைகள், வர்த்தக நிலையங்களாவும் கதவடைப்புச் செய்யப்பட்டதோடு நெல்லியடி மத்திய சந்தையும் இயங்காது வெறிச்சோடிக் காணப்பட்டது. பல பிரபல கல்லூரிகளும், பாடசாலைகளும் மாணவ மாணவிகள் பகிஷ்கரிப்புச் செய்ததால் மூடப்பட்டன. இரண்டொரு பாடசாலைகளில் மற்றிற்கும் குறைவான பிள்ளைகளே காணப்பட்டனர்.

திடீர் திடீரென வீதிகளிலும் மரங்களிலும் காணப்பட்ட கறுப்புக் கொடிகளை பொலிசார் அகற்றினர்.

நெல்லியடியிலுள்ள இ.போ.ச. டிப்போக்களிலும் பல சேவைகள் ரத்துச் செய்யப்பட்டது.

## யாருடையது?

யாழ்ப்பாணம், வியா

நாவலர் ரோட்டைச் சேர்ந்த செல்வன் ஜி. மோகனதாஸ் என்பவரால் வருமான வரிப் புத்தகம் ஒன்று நாவலர் வீதியில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## வெப்பம் குறைகிறது; என்றாலும் 350 பேர் பலி

புதுடில்லி, மே 24

இந்தியாவில் கடந்த சில வாரங்களாக வீசிய அனல் காற்று இப்பொழுது சிறிது குறைந்திருக்கின்றது. பல மாநிலங்களில் நல்ல மழை பெய்திருப்பதே இதற்குக் காரணம்.

என்றாலும் நேற்றுவரையில் 350 பேர் அனல் காற்றின் காரணமாக மரணமடைந்துள்ளனர். பீகாரில் மாத்திரம் 61 பேர் மரணமாகியுள்ளனர். ஆந்திராவில் 30 பேர் மரணமடைந்துள்ளனர். ஒரிஸாவில் நேற்று 4 பேர் மரணமானார்கள்.

## புதிய நீதிமன்றம்

கொழும்பு, புதன்

தேசிய சட்டசபையின் அடுத்த கூட்டத்திற்குமுன்பு அரசியல் சட்டம் சம்பந்தமாக எழும் பிரச்னைகளை விசாரணை செய்ய ஒரு புதிய நீதிமன்றம் அமைக்கப்படும். இத்தகவலை நீதியமைச்சின் செயலாளர் திரு நிஹால் ஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

தேசிய சட்டசபையின் அடுத்த கூட்டம் ஜூன் மாதம் 5-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இந்த நீதிமன்றத்துக்கு 5 நீதிபதிகளை ஜனாதிபதி பிரதமரின் சிபார்சின்பேரில் நியமிப்பார்.

## சிங்களம் கற்பிக்கத் தீர்மானம்

பருத்தித்துறை புதன்

பரீட்சார்த்தமாக தேவரையாளி இந்துக்கல்லூரியில் 9-ம், 10-ம் வகுப்புகளில் சிங்களம் ஒரு பாடமாகப்போதிக்கப்படவேண்டுமென மேற்படி கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சின்னத்தம்பி தலைமையில் கூடி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி வடமாநிலக் கல்வி அதிபதி திரு. வி. அமரசேகராவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

## அபிவிருத்தி வேலைகள் தீவிரம்

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சி தென்மேற்குக் காரியாதிகாரி பிரிவின் அபிவிருத்தி வேலைகளும் கலாச்சார அலுவல்களும் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. பெரும்பாலும் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி நடராஜாவின் தீவிர முயற்சியின் காரணமாகக் கோத்தியாவத்தைப் பகுதியில் பட்னீர் பதனிடும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுத் திறம்பட நடந்து வருகிறது. இப்பகுதியின் அபிவிருத்திக்காக காரியாதிகாரி திரு கே. மாணிக்கவாசகர் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

## வி. என். பாராட்டு

குருநகர், செவ்வாய்

"அரசியல் சாசனத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழ்த் தலைவர்களின் கூட்டு முன்னணியின் வேண்டுகோளை ஏற்று 22ந் திகதி முதல் பாடசாலைகளை பகிஷ்கரித்துத் துக்கம் தெரிவித்து ஒத்துழைப்புக் கொடுத்த தமிழ் மாணவர்களுக்கு சாவகச்சேரி எம்.பி. திரு. வ. ந. நவரத்தினம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

"நீங்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்கள் என்பதை நிரூபிக்க 25ந் திகதி பாடசாலை ஆரம்பமாகும்போது எல்லோரும் ஒழுக்கமாகவும், கட்டுப்பாடாகவும் உங்கள் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டும். அப்படிச் செல்வது 22ந் திகதி முதல் நீங்கள் செய்த போராட்டத்திற்கு மணிமுடிபோல் அமையும்" என்றும் அவர் தமது பாராட்டில் மாணவர்களைக் கேட்டுள்ளார்.

நல்ல உத்தியோகம் வேண்டுமா?

நீங்கள் வேலையற்ற இளைஞர்களாக இருந்தால்.......

நல்ல வருவாயைப்பெற்று சுதந்திரமாகவாழ மகத்தானதொரு வாய்ப்பை உங்களுக்கு அளிக்கிறோம்.

கீழே தரப்பட்ட கூப்பனை பூர்த்திசெய்து

சேல்ஸ் அண்ட் பிரண்ஸ் லிமிடெட்

15, முதலாவது மாடி, கபூர் கட்டிடம், கொழும்பு-.

என்ற முகவரிக்கு அனுப்பி இலவச விபரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

கூப்பன்

எவ்வித நிபந்தனையுமின்றி மேற்குறிப்பிட்ட இலவச விபரங்களைத் தயவுசெய்து அனுப்பி வைக்கவும்.

பெயர்: ..........................

விலாசம்: ..........................

..........................

# ‘தமிழ் மூலம் பரீட்சை எழுத சட்டத்தில் இடமுண்டு’

பருத்தித்துறை: புதன்

"தமிழ்ப் பிள்ளைகளுக்கு மாத்திரம் சிங்களம் கற்பிக்க உத்தேசித்து, சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர் நியமனத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஆனால் சிங்களப் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிப்பதுபற்றி அரசு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை, அந்நோக்கமே அரசுக்கில்லை. தற்பொழுது பெற்றோர் விரும்பினால் என்று கூறிவிட்டு நாளடைவில் கட்டாயப்படுத்தும் நோக்கமும் அரசுக்குண்டு. 9-ம், 10-ம் வகுப்புகளில் சிங்களம் போதிப்பதுபற்றி, உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி தமது தொகுதியிலுள்ள பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழருக்குக் கொடுக்கப்படும் உத்தியோகங்கள் மாவட்ட அடிப்படையிலும் புள்ளி அடிப்படையிலும் கொடுக்கப்படுவதால் உத்தியோகம் பெறச் சிங்களம் படிக்கவேண்டியதில்லை. அதைவிட, இன்றைய சட்டப்படி தமிழ் மூலம் கல்வி கற்றவர்கள் உத்தியோகம் பெற, தமிழ்மூலம் பரீட்சை எழுத உரிமையுண்டு. எனவே தமிழ் தொடர்ந்து பாவிப்பில் இருக்கவேண்டுமாயின் பாடசாலைகளிற் சிங்களம் போதிப்பது ஏற்க முடியாது" என்றும் அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 12ம் திகதி (25-5-1972)

மேஷம்- காதலர்களுக்கு குதூகலமான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும், இல்லத்தில் இனிமை காண சுபதினம்

ரிஷபம்- புதிய தலையீடு தலைதூக்கும், வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாது இருத்தல் நன்று

மிதுனம்- நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் உதவிக்கு வருவர் புண்ணிய விருப்பு மேவிடும்.

கடகம்- தொழில் துறையில் முன்னேற்றம் தொடர்ந்து வரும் புகழ்நிறை புதிய அபிவிருத்தி தென்படும்.

சிம்மம்- மனைவிமாராலும் மனவருத்துக்கு இடமுண்டு. பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் நடைபெறும் வரவேற்க வேண்டிய நாள்.

கன்னி- சிந்தனைகளால் வேதனைப்படுவீர்கள். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம் துக்கதினம்.

துலாம்- ஆத்திரப்போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். வேண்டியவரை வைத்துக் கொள்வீர்.

விருச்சிகம்- சொகுசான வாழ்வு கிடைக்கும், பிறருடைய மதிப்புக்கு இலக்காவீர்கள் வரவேற்க வேண்டிய தினம்.

தனுசு- அலைமோதும் மனத்துடன் அமைதியும் குன்றும், கவலைகள் எதிரிகளும் காத்திருப்பர் இன்று.

மகரம்- வானம்பாடி போல் கானம் இசைப்பீர். வாழ்விலும் ஒளிவீசும் முதியவர் ஒருவர் நல்வழிகாட்டுவார்.

கும்பம்- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம், உடல்நலத்தை பேணி நடக்கவும்.

மீனம்- குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும் பிரம்மச்சாரிகளின் வாழ்வில் காதல் அரும்ப நல்ல நாளாகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தமிழ்த்தின விழா

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறைக் கல்வி வட்டாரத்தில் அடுத்த மாதம் 9ந் திகதி நடைபெறவிருக்கும் தமிழ்த்தின விழாவுக்கான போட்டிகள், [illegible] ஆகியவற்றை இப்பகுதிப் பொதுமக்கள் அன்பளிப்புச் செய்துவருகின்றனர்.

## நிர்வாகிகள்

புத்தூர், புதன்

ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலைய பொதுக்கூட்டம் புத்தூர் கிராமசபைத் தலைவர் திரு மு. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்- த சண்முகம், தலைவர் - இ மயில்வாகனம், உபதலைவர் - ந பிச்சாமி, செயலாளர் க குண்டுமணி, உபசெயலாளர் - செ தம்பிராசா, பொருளாளர் - சி ஆனந்தன், உபபொருளாளர் - செ சிவசரணம்.

நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஒத்திவைப்பு

மாவிட்டபுரம் புதன்

கன்னாகத்தைச் சேர்ந்த எஸ் செல்வராசா என்பவர் 70-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ம் திகதி தாவடியைச் சேர்ந்த அப்புக்குட்டி நடேசுவின் 700 ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி உபகரணத்தைக் களவாடியதாகவும் பின் அப்பொருளைக் கிளிநொச்சியில் விற்றதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மல்லாகம் நீதிபதி ஐ சிவானந்தன் விசாரணையை ஒத்திவைத்தார்

## புவியியல் ஆராய்ச்சி செய்வர்

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் புவியியல் மாணவர் மன்றத்தினர் புவியியல் ஆசிரியர் திரு. சா. ஜெயராசா தலைமையில் வல்லிபுரக்கோவில் பகுதியில் மண்ணை அகழ்ந்து ஆராய்ச்சி மேற்கொள்ளவிருக்கின்றனர் இவ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்படும் பழைய உலோக நாணயங்களும், தொல்பொருட்களும் தொல்பொருளாராய்ச்சிக் குழு விரிவுரையாளர் திரு. வே. இந்திரபாலாவிடம் கையளிக்கப்படுமென்றும், இலங்கையிலுள்ள சகல புவியியல் மாணவர்களுக்கும் பயன்படக்கூடியதாக இவ்வாராய்ச்சி பற்றிய விரிவான அறிக்கை வெளியிடப்படும் என்றும் திரு. சா. ஜெயராசா தெரிவித்தார்.

## பாடசாலைக் கட்டிடம் தீக்கிரை

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றைச் சேர்ந்த சிறு கட்டிடம் தீக்கிரையாயிற்று. இது பற்றிப் பருத்தித்துறைப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

## 8-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் றெக்கிளமேஷன் சனசமூக நிலையத்தின் 8-வது வருடாந்த விழா அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் நிகழ்ச்சிகளை யாழ். மாநகரசபை அங்கத்தவர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் தொடக்கி வைத்தார்.

இந்த விழாவையொட்டி பல விளையாட்டுப் போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. விசேஷமாக மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, நீச்சல் ஓட்டப் போட்டி ஆகியன விமரிசையான ரீதியில் நடாத்தப்பட்டது. இறுதிநாள் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்துக்கு யாழ். மாநகரசபை அங்கத்தவர் டாக்டர் ஏபிரகாம் தலைமை வகித்து வெற்றி வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களின் விபரம்: வி. ராஜன், பிலிப் றெமிலற் பயஸ், கே. செல்வராசா எஸ். மகேந்திரன், ஏ. ஜோர்ஜ் கொன்ரன்ரைன்.

7 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களின் விபரம்: இராமலிங்கம், திருநாவுக்கரசு, எம். அகஸ்ரின், றஞ்சித் ஞானப்பிரகாசம், எஸ். இராசதுரை, பே. ஜோசப்.

4 மைல் நீச்சல் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களின் விபரம்: இஸ்தோர் மரியதாஸ், மவுண்ட், ஆசீர்வாதம் பூலிஸ், இஸ்தோர் றெகோரி, எஸ். கே. றெமேடியஸ். [தேநி]

புதியரக

## மென்பந்துப் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மென்பந்தாட்டச் சங்கம் இம்முறை மென்பந்தாட்டப் போட்டியில் பல புதிய முறைப் போட்டிகளை. யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்த இருக்கின்றது.

ஆறு வீரர்கள் பங்குபற்றும் போட்டி, இரண்டு வீரர்கள் பங்குபற்றும் போட்டி. தனிப்பட்ட வீரர் பங்குபற்றும் போட்டி போன்ற புதிரகப் போட்டிகள் இம்முறை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் அனைத்தும் அடுத்தமாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள பல விளையாட்டு மைதானங்களில் நடாத்தி முடிக்க இருப்பதாக, யாழ்ப்பாண மென்பந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. கே. எல். சி. சேவியர் தெரிவித்தார். (தேநி)

## 'கிறீன்பீல்ட்' மன்னார் செல்கின்றது

யாழ்ப்பாணம், வியா.

கடந்த வருடம் மன்னார் உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சாம்பியன் பட்டத்தைப் பெற்ற அடம்பன் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் அழைப்பின் பேரில் 'கிறீன்பீல்ட்' கழகம் மன்னார் செல்கின்றது.

அடம்பன் சென். மேரிஸ் கழகமும் யாழ்ப்பாணம் "கிறீன்பீல்ட்" கழகமும் 28 ம் திகதி. சென். மேரிஸ் கழக மைதானத்தில் சிநேகபூர்வமான போட்டியில் மோதும்.

"கிறீன்பீல்ட்" கழகத்துக்கு வீரர் எஸ். கனகரத்தினமும், சென் மேரிஸ் கழகத்துக்கு வீரர் டி. ஜே. ஆனந்தராசாவும் தலைமை தாங்குகின்றனர். [தேநி]

## இடமாற்றம்

மீசாலை, புதன்

பனை மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய உதவி ஆசிரியை திருமதி அகிலமலர் ஞானப்பிரகாசம் குமாரலை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கும், பனை மகாவித்தியாலயத்திலிருந்த திருமதி ஞா. நவரத்தினம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திற்கும், எழுதுமட்டுவாள் கி. சி. தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து திருமதி உ. இராசசிங்கம் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

பருத்தித்துறை, புதன்

வரணி மகாவித்தியாலய ஆசிரியர் திரு. பி. பரஞ்சோதியும், திருமதி எஸ். பரஞ்சோதியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

0 0 0

யாழ்ப்பாணம் வியாழன்

ரயில்வேப்பகுதி பிரதான கணக்காளர் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய திரு வே கமலநாதன் யாழ்ப்பாணம் ரயில்வே ஸ்டேசனுக்கு ஜூன் மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளார்.

## தற்கொலை

கல்வியங்காடு புதன்

நாச்சிமார்கோவிலடியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை நச்சுத்திராவகம் அருந்தித் தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

மரணமான கந்தசாமி (34 வயது) சிலநாட்களாக குடும்பத்தாரிடம் சண்டை பிடித்ததாகவும் இதனால் தற்கொலை செய்திருக்கலாம் எனவும் மரண விசாரணையின் போது தெரியவந்தது. மரணச்சம்பந்தமாக மரண விசாரணை நடாத்திய திரு. எம் கனகரத்தினம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## சி. த. மகாசபை வாழ்த்து

யாழ்ப்பாணம், வியா

ஸ்ரீலங்கா குடியரசை வாழ்த்தியும் அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்புத் தெரிவித்தும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை தந்தியொன்றை அனுப்பிவைத்தது.

## குருபூசை

ஊர்காவற்றுறை புதன்

சரவணை சைவ இளைஞர் சங்க ஆதரவில் திருஞானசம்பந்தர் குருபூசைத் தினம் இம்மாதம் 30-ம் திகதி சரவணை தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறவிருக்கிறது.

## சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சுற்றறிக்கை

பருத்தித்துறை, புதன்

குடியரசுப் பிரகடனவிழா பற்றிய தலைநாயக அதிபரின் சுற்றறிக்கையையும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையையும், நெல்லியடிப் பட்டினசபைத் தலைவர் திரு எஸ் பி தேவசகாயம் திருப்பி அனுப்பினார்; இச் சுற்றறிக்கைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இருந்தமையால் அதனைத் திருப்பி அனுப்பவேண்டுமெனச் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

## 2 சிறுவர்களைக் காணவில்லை

கரவெட்டி, புதன்

கரவெட்டி மேற்கு, கன்பொல்லை வீதியைச் சேர்ந்த மாணிக்கம் நாகராசா என்ற 15 வயதுச் சிறுவனைக் கடந்த ஒரு மாதமாகக் காணவில்லை. இதுபற்றி இவரது பெற்றோர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளனர்.

0 0 0

உடுப்பிட்டி, புதன்

பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச் சென்ற மாணவன் ஒருவாரமாகியும் இன்னும் வீடு திரும்பவில்லையாம். கரணவாய் தெற்கு '[illegible]' என்னும் இடத்தைச் சேர்ந்த பொன்னர் வேலும்மயிலும் (வயது 15) என்னும் இளைஞரே காணாமற் போனவராவார்.

இவ்விளைஞர் வதிரி திரு இருதயக் கல்லூரி ஜி ஸி ஈ (சாதாரண வகுப்பு) மாணவராவார். தனது மகனைக் காணவில்லையென்ற பிரஸ்தாப மாணவனின் தந்தை நெல்லியடிப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

## தேர்த்திருவிழா

ஊர்காவற்றுறை புதன்

சரவணை - நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நாளை நடைபெறவிருக்கும் வெளிய சப்பரத் திருவிழாவையடுத்து மறுநாள் தேர்த் திருவிழா நடைபெறும்"

0 0 0

யாழ்ப்பாணம், வியாழன்

வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா இம்மாதம் 26 ம் திகதி நடைபெறவிருக்கிறது. பிறவூர் அடியார்களின் வசதிக்காக 778, 779, 780 ம் இலக்க பஸ் சேவை இரவு 8 மணிவரை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## பெற்றோர் - ஆசிரியர் சங்கம்

ஊர்காவற்றுறை புதன்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தமிழ்ப்பாடசாலைப் பெற்றோர் - ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவு சமீபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு இ [illegible], காரியதரிசி: திரு ச ஜோசெப், தனாதிகாரி: திரு அ. அலோசியஸ், திரு எம் தம்பையா கணக்காய்வாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## சிறுபோக வேளாண்மை

இலுப்பைக்குளம், புதன்

மேற்குமுறிப் பகுதியில் தற்போது பெய்த மழையினால் குளங்கள் பல நிரம்பியிருக்கின்றன. இதனால் இப்பகுதியில் சிறுபோக வேளாண்மை செய்ய ஏதுவாகவுள்ளது.

## பொங்கல் விழா

புலோலி, புதன்

புலோலி மந்திகை கண்ணகி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று தொடங்கியுள்ளது. தொடர்ந்து 10 நாட்களுக்கு விசேஷ பூசைகளும் இடம் பெறும்.

## பொங்கல்

யாழ்ப்பாணம், வியா.

இம்மாதம் 25ம் திகதி வள்ளிவிளாங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பொங்கல்விழா நடைபெறவிருக்கிறது.

அன்றைய தினம் சுண்டிக்குளி யாழ் நாடகக்கலாமன்றத்தினரின் "இ. பி. 2000" என்னும் விஞ்ஞான சமூக சரித்திர நாடகம் மேடையேற்றப்படும்.

## ...பகுதி

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்" பெற்றோர் நிலையங்களில் நாசவேலைக்கு பெற்றோர் வாலிபர்களின் விபரங்களும் கிடைத்திருக்கிறது என்றும் கூறினார் எஸ். பி.

கண்டு விவிலுள்ள ஒரு பாடசாலையும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் நாசவேலைக்காரர்களின் செயலால் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன

பெற்றோர்கள் இதனால் பெரிதும் கவலையடைந்துள்ளார்கள்; தமது பிள்ளைகள் படித்து முன்னேறவேண்டுமென்று விரும்பும் பெற்றோர்களுக்கு இச்சம்பவம் ஆத்திரத்தையும் கவலையையும் அளிக்காமல் வேறென்ன செய்யும்? என்று கேட்கிறார் பொலிஸ் அதிபர்.

தொலைபேசித் தொடர்புக் கம்பிகளையும் அறுத்து எறியும் வேலைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் இவர்களுடைய எச்சரிக்கை—சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி பொதுமக்களின் சொத்துக்களை நாசமாக்காதீர்கள்—என்றும் வேண்டுகோள் விடுக்கிறார் எஸ். பி

# 'தமிழர் உரிமை கிடைக்கும்வரை சட்டமறுப்பு இயக்கங்கள்!'

## கோப்பாய் எம். பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழ் மக்கள் உரிமை கிடைக்கும்வரை நாம் சட்டமறுப்பு இயக்கங்களை நடாத்தவேண்டும். விட்டுவிட்டுக் கொண்டே தமிழ் பேசும் மக்கள் சட்டமறுப்பு இயக்கங்களை நடாத்துவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது.

யாழ். வீரசிங்கம் ஹோல் மண்டபத்தில் நடந்த தமிழர் கூட்டணி கூட்டத்தில் கோப்பாய் எம் பி திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ் ஜே வி செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். ஒலிபெருக்கியின்றியே இக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 300 பேர் மட்டுமே மண்டபத்திற்குள் இருக்கக்கூடியதாயிருந்தது. பெருந்திரளான மக்கள் மண்டபத்திற்கு வெளியில் திரண்டிருந்தனர். முதலில் கதிரவேலுப்பிள்ளையும் அதன்பின் திரு. எம் சிவசிதம்பரமும் பேசினார்கள். மூன்றாவதாக முன்னாள் வவுனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கத்தை பேச அழைத்தார்கள். அப்பொழுது திரு. சுந்தரலிங்கம் மண்டபத்திற்குள்ளிருந்த மேடையை விட்டு இறங்கி வெளியே வந்தார். மண்டபத்திற்குள்ளிருந்த மக்களும் வெளியில் வந்தார்கள். திரு. சுந்தரலிங்கம் வெளி மைதானத்தில் நின்றுகொண்டே பேசினார்

திரு. சுந்தரலிங்கம் கூறியதாவது:-

தமிழர்கள் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வருஷத்திற்கு முன்பிருந்து வாழ்ந்துவருகிறார்கள் இன்று அவர்கள் கடைசிக்கட்டத்தையடைந்துவிட்டார்கள். தமிழர்கள் சம மேதரான தண்டத்தைக் கடைப்பிடிப்பவர்கள். நாம் எல்லாவற்றையும் முயற்சித்துத் தோல்விகண்டு தவித்திருக்கிறோம்

எதிர்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? கட்டம் போட்டு கும்மியடிப்பதில் பயனில்லை. தலைவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி செய்யவேண்டும்? அது சரியோ பிழையோ என்று ஆராயக்கூடாது. தலைவர்களின் முடிவை ஏற்க வேண்டியது நமது கடமை, நமது கடமையை செய்யும்போது ஒற்றுமையாகச் செய்யவேண்டும்,

திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது:

நீதிமன்ற சட்டங்கள் யாவும் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அவை தமிழில் மொழிபெயர்க்கப்படும். நீதிமன்றத்தில் நாம் ஒரு வழக்கை எடுத்து சட்ட ஆதாரம் காட்டி வாதாடும்போது மூலப்பிரதியான சிங்கள சட்டத்தையே எடுத்துக் கூறவேண்டும். தமிழ்மொழி பெயர்ப்பை நீதிமன்றத்தில் ஏற்கமாட்டார்கள். ஆதலால் வருங்காலத்தில் சிங்களம் நன்கு தெரிந்தவர்தான் வழக்கறிஞராக கடமையாற்ற முடியும். இதனால் நான் அஞ்சவில்லை. எனக்கு ஏர் பிடிக்க என் தந்தை பழக்கியிருக்கிறார். ஆனால் உங்கள் பிள்ளைகள் வருங்காலத்தில் வழக்கறிஞராக வரவேண்டுமானால் சிங்களம் படித்திருக்கவேண்டும்.

இன்றைய அரசியல் சட்டத்தில் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற நாடுகளில் சகல மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. பௌத்தமதம் பேணிப் பாதுகாக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

திரு. வி. செல்லத்தம்பு மற்றும் கூட்டணிப் பிரமுகர்கள் பேசினார்கள். கூட்டம் நடைபெற்ற இடத்தில் பொலிசார் எவரும் காணப்படவில்லை.

வாலிபர் ஒருவர் தனது கையை கத்தியால் கீறி திரு. செல்வநாயகத்தின் நெற்றியில் இரத்தத்திலகமிட்டபின் மற்றும் தலைவர்களுக்கும் இரத்தத்திலகமிட்டார். கூட்டம் முடிந்தபின்னர் எல்லோரும் நாவலர் மண்டபத்தை நோக்கி அமைதியாக சென்றனர்.

**நாவலர் மண்டப கூட்டம்**

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருக்க தமிழர் கூட்டணி எம் பிக்கள் ஒன்றுசேர்ந்து யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்றிரவு தமிழர் உரிமை கிடைக்கும்வரை அரசியல்சட்டத்தை ஏற்கமாட்டோம் என்று உறுதி எடுத்துக்கொண்டார்கள்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு ஒலிபெருக்கி பாவிக்க அனுமதி வழங்கப்படவில்லை. பொலிசாரும் கடமையாற்ற வரவில்லை.

திரு ஏ அமிர்தலிங்கம் பேசும்போது கோண்டாவில் சிறைச்சாலைக்குள் சுமார் 25 மாணவர்களும் பொலிஸ் நிலையங்களில் சுமார் 100 மாணவர்களும் அடைபட்டுக் கிடக்கும் அதேநேரத்தில் நாங்கள் பல்லாயிரக்கணக்காக திரண்டு நமது எதிர்ப்பைக் காட்டுகிறோம் என்று கூறினார்.

திரு. ஸி, சுந்தரலிங்கம் திரு. காசிஆனந்தன், திரு. தங்கத்துரை. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் பேசினார்.

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் பஜனைச்சபையினரின் வைகாசி விசாகப்பஜனை யாத்திரை நாளை மாலை நல்லூர் தேவஸ்தானத்தில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாகச் செல்வச்சந்நிதியை அடையும். இப்பாத யாத்திரையில் சகலரும் கலந்துகொள்ளலாமெனத் தெரிகிறது.

## தேசிய,..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

17-ம் திகதி, திருமலை 18-ம் யாழ்ப்பாணம் 25-ம் திகதி திடீரென எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை திடீரென எடுக்க கூட்டணி சார்பில் 9 பேர்கொண்டகுழு தெரிவு செய்யப்பட்டுள்ளது இவர்களின் பெயர்கள் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

கூட்டம் நடைபெற்ற சாரியாலயத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கான மாணவர்கள் திரண்டிருந்தனர்.

சத்தியப்பிரமாணம் எடுக்கவேண்டாமெனக்கோரி பல தந்திகள் எம்.பிக்களுக்கு வந்தன

கூட்டம் முடிந்து எம்.பிக்கள் வெளியே வந்தபோது "ராஜினாமா செய்யுங்கள்" என மாணவர்கள் கோஷமிட்டனர் அப்போது உணர்ச்சிவசப்படாமல் பொறுத்திருங்கள் என கூட்டணிப்பிரமுகர்கள் தெரிவித்தனர்.

சுமார் ஐந்து மணித்தியாலங்கள் கூட்டம் பூட்டப்பட்ட அறைக்குள் நடைபெற்றது.

முன்னாள் வவுனியா எம். பி: திரு. சுந்தரலிங்கம், தமிழ் காங்கிரஸ் காரியாலயத்தை வந்தடைந்ததும் அங்கு திரண்டு நின்ற மாணவர்கள் பலத்த கோஷமிட்டு வரவேற்றனர். "கடைசிக் கட்டத்திற்கு வந்துவிட்டோம், தயாராக இருங்கள்" என அவர் மாணவர்களிடம் கூறினார். அதன்பின் மாணவர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு அவர் சிரித்தபடி பதிலளித்துக்கொண்டிருந்தார்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வந்து சேர்ந்த பின்னர் கூட்டம் ஆரம்பமானது பதவிகளைராஜினாமா செய்வதா இல்லையா என்பதுபற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்ட பின்னர் மக்களின் கருத்தை திரட்டி அதன்படி முடிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## நமது பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாமதித்திடாமை நான் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் முன்னேற்றத்திற்காக கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றை நடத்தலாம்; அவையாவும் நாட்டின் நலனுக்காகவே அமையவேண்டும்.

பொருளாதார சுதந்திரத்துக்கான எமது வீரப்போராட்டத்துக்கு வீரவாலிபரின் ஒத்துழைப்பு அவசியம். அது கிடைக்கும் என்பது எனது நம்பிக்கை.

மேலும் அழிவுத் திட்டங்களை அனுமதிக்கக்கூடாது. இத்திட்டங்களை சிலர் மேற்கொண்டு அதற்கு வெளிநாட்டார் உதவியைப் பெற முயலுகிறார்கள். இது தேசிய ஒற்றுமைக்கு எச்சரிக்கையாகவிருக்கிறது. இத்தகைய உதவிகள் நிராதாரமானவை என்பதை மறக்கக்கூடாது

மறந்துபோன சிறிய பிரச்னைகளை மீண்டும் கிளறி மேலும் பிரச்னைகளை உண்டு பண்ணக்கூடாது. சிறிய தணல் பெரிய தீவிபத்தைக் கொண்டுவருதல்போல இச்சிறிய பிரச்னைகள் பாரதூரமான விளைவுகளைத் தரலாம்"

இவ்வாறு நாட்டு மக்களை கேட்டுக்கொண்ட பிரதமர் மேலும் அரசாங்க ஊழியர்களும், கூட்டுத்தாபன ஊழியர்களும் நாட்டுக்கும் அரசுக்கும் நல்லவர்களும் விசுவாசமாக இருப்பதாக இன்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஒக்ஸ்போர்ட்
(CXFORD)
டெற்றோன் 65 வீதம்
கொட்டன் 35 வீதம்
சேட்
விற்பனை விலை ரூ 23/-
மலிவு விலை ரூ 20/-
வாடிக்கைகாரர் ஒருவருக்கு ஒன்று
குறிப்பிட்ட அளவிருப்பு
ரொலரும்ஸ்
46, பிரதான வீதி (போன்:7099) யாழ்ப்பாணம்.

NIKONA SALES
மாபெரும்
ஏல விற்பனவு
இறந்த போசனசாலை, வர்த்தக
ஸ்தாபனங்களுக்கு வேண்டிய தளபாடம்
மற்றும் வேறு பொருட்களும்
சனிக்கிழமை 27-5-1972 காலை 10.30 மணிக்கு
யாழ்ப்பாணம். கஸ்தூரியார் வீதி 91-ம் இலக்கத்திலுள்ள
லேக்வியூ ஹோட்டல்
கட்டிடத்தில்
விற்பனைப்பொருட்கள்:
குளிர்சாதனப் பெட்டிகள் - சீலிங் மின் விசிறிகள்
உபசார அறைத் தளபாடங்கள் - காசு கணக்கெடுக்கும் யந்திரம்
எடுத்துச் செல்லக்கூடிய - ஆபீஸ் மேசைகள்
தட்டச்சு யந்திரம் - சோடா சைபன்
றேடியோக்கள் - ஹோட்டல் பாவனைக்கு
மரபிள் பதித்த மேசைகள் - மரத்தாலான மேசைகள்
வோறு ஸ்பிறிங் கட்டில்கள் - தனிக்கட்டில்கள்
தேநீர் எடுத்துச்செல்லும் வண்டிகள் - கதிரைகள்
காட்சிப்பெட்டி (ஷோகேஸ்) அலுமாரிகள் (பெரியதும் சிறியதும்)
மரத்தட்டுகள் - கரியடுப்புடன் கூடிய வைசிக்கிள்கள்
குசினிப்பாத்திரங்கள் மற்றும் அலுமாரி (CUPBOARDS) முதலியன
நாளை முதல் பொருட்களைப் பார்வையிடலாம்.
விற்பனையான உடன் பணம் செலுத்திப் பொருட்களை
அவ்விடத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.
நிகோந ஏல நிலையம்
166, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்
எஸ். நரசிங்கம் ஜே. பி.
ஏல விற்பனையாளர்.

### மணிவாக்கு

எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்று வாது பேசிஞய். சாதிசமயமென்று சண்டைப்படுகிருய். தத்துவத்தை அறியாமல் சங்கடப்படுகிருய். ஒழிவுமுணராமல் உண்மை அறிந்தவன் போல் ஊரெங்கும் சென்று பிரசங்கம் பண்ணுகிருய்.

—யோகசுவாமிகள்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna; Telephone: 389

சுக்கிரவாரம் பரிதாபி வருஷம் வைகாசி மாதம் 12-ந் திகதி (25-5-72)

## அடுத்த படி?

தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாவது பெருஞ் சமூகமாக வாழ்ந்து வருகிருர்கள். [illegible]

[illegible]

### மாஸ்கோ உச்சி மாநாடு

[illegible]

# 1948ம் ஆண்டு வழங்கப்பட்ட உரிமைகளைக்கூட புதிய அரசியல் அமைப்பு தரவில்லை

முன்றுவதாக 1948ம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் மக்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகள், சுதந்திரங்கள், சலுகைகள் ஆகியவற்றையேனும் புதிய அரசியலமைப்பு மக்களுக்குக் கொடுக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது. மக்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் வேண்டிப் பாதுகாப்பதற்காகப் புதிய அரசியல் அமைப்பிலுள்ள பாதுகாப்பு முறைகள் போதியவையென்றோ முக்கியமாக, இவ்வுரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கெனப் புதிய அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் முறை [illegible]

(அரசியல் அமைப்புச் சட்டத்தை அமுலாக்குவதற்காக நடைபெற்ற சபையின் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா தமது கட்சி ஏன் இத்திட்டத்தை எதிர்க்கின்றது என்பதைக் காரணம் காட்டி விடுத்த அறிக்கையின் தொடர்ச்சி)



### குறைபாடுகள்

[illegible]

### சுவீப் முடிவு—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 09 A 0557 | 16 A 0533 |
| 24 A 06,5 | 26 A 0225 |
| 1. B 0222 | 20 B 0379 |
| 20 B 0512 | 22 B 0160 |
| 24 B 0659 | 32 B 0186 |
| 1. C 0960 | 20 C 0725 |
| 26 C 0092 | 21 D 0902 |
| 30 D 0641 | 03 E 0222 |
| 22 E 0056 | 27 E 0093 |
| 0 F 0544 | 10 F 0377 |
| 13 F 0008 | 18 F 0800 |
| 20 F 0288 | 27 F 0196 |
| 06 G 0352 | 13 G 0524 |
| 04 H 0195 | 04 H 0724 |
| 11 H 0316 | 11 H 0516 |
| 27 H 0037 | 11 J 0123 |
| 08 M 0520 | 14 M 0539 |
| 15 M 0589 | 19 M 0864 |
| 28 M 0035 | 01 N 0316 |
| 12 N 0890 | 32 N 0199 |
| 18 J 0042 | 24 J 0060 |
| 26 J 0088 | 30 J 0368 |
| 03 K 0509 | 01 L 0642 |
| 04 O 0402 | 17 O 0334 |
| 23 O 0512 | 29 O 0443 |
| 11 P 0932 | 18 P 0693 |
| 24 P 0169 | 19 Q 0787 |
| 23 Q 0329 | 05 R 0429 |
| 21 R 0332 | 23 R 0177 |
| 04 S 0970 | 05 S 0528 |
| 09 S 0770 | 11 S 0666 |
| 19 S 0282 | 26 S 0303 |
| 28 S 0261 | 17 T 0803 |
| 22 T 0035 | |
| 22 T 0972 | 28 T 0084 |
| 30 T 0205 | 04 U 0638 |
| 05 U 0835 | 07 U 0714 |
| 09 U 0426 | 21 U 0979 |
| 28 U 0802 | 25 U 0227 |
| 29 U 0466 | 32 U 0115 |
| 08 V 0629 | 23 V 0543 |
| 31 V 0303 | 04 W 0280 |
| 05 W 0648 | 25 W 0512 |
| 27 W 0006 | 32 X 0047 |
| 32 X 0386 | 26 Y 0169 |
| 30 Y 0084 | 04 Z 0875 |
| 05 Z 088 | 13 Z 0410 |
| 14 Z 0594 | 22 Z 0907 |
| 22 Z 0851 | |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.